# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 07 /பேரூ/2026**
**நாள் : 10.07 .2026**

G. பிரபு,
பூலாம்பட்டி,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பூலாம்பட்டி பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி அஞ்சல், வளையசெட்டியூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. பிரபு என்பவரது 28.11.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.12.2025 அன்று பெறப்பட்டு, 07/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி அஞ்சல், வளையசெட்டியூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. G. பிரபு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 28.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“நான் சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சியை சார்ந்தவர். நான் 2022-2023ஆம் ஆண்டில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM 2.0) தனிநபர் கழிப்பறை கட்டி முடித்தேன். நாளது தேதி வரை மானியத் தொகை வழங்கப்படவில்லை. மானியத் தொகை விடுவிக்கப்படாதது தொடர்பாக கடந்த 08.09.2025 அன்று பேரூராட்சிகள் இயக்குநருக்கு குறைதீர் மனு அனுப்பினேன். நாளது தேதி வரை மானியத் தொகை விடுவிக்கப்படவில்லை. எனவே மானியத் தொகை விடுவிக்க தாங்கள் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.01.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் பூலாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் செயல் அலுவலரிடமிருந்து எவ்வித அறிக்கையும் பெறப்படவில்லை.

3. இருப்பினும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான பூலாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு உரிய ஆவணங்களுடன் மற்றும் விரிவான அறிக்கையுடன் ஆஜராகுமாறு 27.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இதற்கிடையில் பூலாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.05.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 88/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்களின் 27.04.2026 நாளிட்ட கடிதத்துடன் இணைத்து வரபெற்ற மனுவில் மனுதாரர் திரு. ஜி. பிரபு என்பவர் (SBM) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடம் கட்டி முடித்துள்ளேன் நாளது தேதி வரை மானியத் தொகை வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மனுதாரரின் மனு கனிவுடன் பரிசீலிக்கப்பட்டது. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் 23.12.2022 நாளிட்ட செயல்முறைகள் ஆணை ந.க. எண். 2355/2021/உ2ன்படி சேலம் மாவட்டம், பூலாம்பட்டி பேரூராட்சியில் 2022-23ஆம் ஆண்டு (SBM) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிப்பிடம் கட்ட 18 பயனாளிகளுக்கு தனிநபர் கழிப்பிடம் கட்ட இலக்கீடு நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 18 பயனாளிகள் தேர்வு செய்து இணையதளத்தில் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டு பயனாளர் எண். (Application ID) பெறப்பட்டு, கழிப்பிடத்தின் கட்டுமானத்தின் மூன்று நிலைகளிலான (3 level) புகைப்படத்தினை Geo-Tagg செய்யப்பட்டுள்ளது. மேலும், இளநிலை பொறியாளர் மற்றும் செயல் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு, முறையாக கட்டி முடிக்கப்பட்டதை உறுதி செய்தபின் 18 பயனாளிகளுக்கும் அவரவர்களுக்கு தனித்தனியாக வங்கி கணக்குகளில் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரான திரு. ஜி. பிரபு என்பவருக்கு இணையதளத்தில் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டதற்கான (Application ID) மற்றும் பணி உத்தரவு தொடர்பான ஆவணங்கள் ஏதும் இப்பேரூராட்சி செயல் அலுவலரால் வழங்கப்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பயனாளர் எண். (Application ID) ஏற்படுத்தாத நிலையில் இவருக்கு கழிப்பிடம் கட்டும் பொழுது மூன்று நிலைகளில் Geo-Tagg புகைப்படம் எடுக்கப்படவில்லை. Geo-Tagg எடுத்து பதியப்படாத நிலையில், இவர் கழிப்பிட மானியம் பெறுவதற்காக தகுதி அற்றவராகிறார். மேலும் சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடிதம் நாள் 21.07.2023 மற்றும் மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட 12.07.2023, 27.07.2023 மற்றும் 17.11.2023 நாளிட்ட மனுக்களின் அடிப்படையில் 2022-23ஆம் ஆண்டு (SBM) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டிட மானியத்தொகை வேண்டி பலமுறை மனு செய்துள்ளதையடுத்து, விண்ணப்பத்தினை பரிசீலித்து நேரடி ஆய்வு மேற்கொண்டதில், மனுதாரர் ஏற்கனவே கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தி வந்துள்ளார் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தனிநபர் கழிப்பிடம் என்பது கழிப்பிடம் இல்லாத வீடுகளுக்கு கழிப்பிடம் கட்ட வசதி இல்லாதவர்களுக்கு அரசால் ஒதுக்கீடு செய்து மானிய தொகை வழங்கப்படுகிறது என்றும், தங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் வழங்க வழிவகை இல்லை என்பதை மனுதாரருக்கு பலமுறை இப்பேரூராட்சி அலுவலக கடிதம் வாயிலாக தகவல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் தன்னிச்சையாக கழிப்பிடத்தினை கட்டி மானியத் தொகை கோரி மனு செய்துள்ளார். எனவே மனுதாரரின் கோரிக்கையின்படி, கழிப்பிடம் கட்டியதற்கான மானியம் வழங்கிட இயலாதநிலையில் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 26.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகாமல், 21.05.2026 நாளிட்ட எழுத்துபூர்வமான வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி, அதை பதிவு செய்யுமாறு கோரியுள்ளார். மனுதாரர் தனது எழுத்துப்பூர்வ வாக்குமூலத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“என்னுடைய தந்தையாரின் பெயரில் 2022-2023ஆம் ஆண்டு தனிநபர் கழிப்பிடம் கட்டப்பட்டது. நான் பேரூராட்சிகள் இயக்ககத்திற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிப்பறை கட்ட கடிதம் எழுதினேன். என்னுடைய கடிதத்தின் அடிப்படையில் பூலாம்பட்டி பேரூராட்சிக்கு 10க்கு மேற்பட்ட கழிப்பறை கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. பூலாம்பட்டி பேரூராட்சியில் பணிபுரிபவர்கள் என்னை கழிப்பறை கட்ட வாய்மொழியாக சொன்னார்கள். அதன் அடிப்படையில் என்னுடைய தந்தையாரின் பெயரில் கழிப்பறை கட்டினேன். எனக்கு எந்தவிதமான ஆவணங்களும் வழங்கப்படவில்லை. மானியத் தொகையும் வழங்கவில்லை. இது தொடர்பாக பேரூராட்சிகள் இயக்ககத்திற்கு கடிதம் எழுதினேன். நடவடிக்கை எடுக்கவில்லை. அதன்பிறகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்தேன். 13.05.2026 அன்று பூலாம்பட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆவணங்களை கேட்டு கடிதம் அளித்தேன். செயல் அலுவலர் தர மறுத்துவிட்டார். 05.02.2026 அன்று என்னுடைய வீட்டிற்கு உதவி பொறியாளர் வருகை தந்து என்னுடைய கழிப்பிடத்தை களஆய்வு செய்து பற்றுச்சீட்டில் கையெழுத்திட்டார். அவருடன் பூலாம்பட்டி பேரூராட்சி பணியாளர் செல்வராஜ் அவர்களும் உடன் இருந்தனர். எனவே எனது நேரடி வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான பூலாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் 26.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் கழிப்பிடம் இல்லாத வீடுகளுக்கு கழிப்பிடம் கட்ட வசதி இல்லாதவர்களுக்கு மானியத் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் தகுதி வாய்ந்த பயனாளர் முதலில் தூய்மை இந்தியா 2.0 திட்ட இணையதளத்தில் விண்ணப்பம் செய்து பயனாளர் எண். (Application ID) ஏற்படுத்தி, பயனாளர் கழிப்பிடம் கட்டும் போது 3 நிலைகளில் Geo-Tagg புகைப்படம் எடுக்கப்பட்டு அதனை ஆய்வு செய்து, மானியத் தொகை வழங்கப்படுகிறது.

- மனுதாரர் திரு. G. பிரபு என்பவர் மேற்காணும் திட்டத்தின் கீழ் மானியம் பெற்றிட உரிய விண்ணப்பத்தினை இணையதளம் மூலம் விண்ணப்பிக்கப்படவில்லை. எனவே மனுதாரரின் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்டதற்கான (Application ID) பயனாளர் எண். ஏதும் பெறப்படவில்லை.

- மேலும் மனுதாரர் கழிப்பிடம் கட்டும்போது கட்டுமானத்தின் 3 நிலைகளிலான புகைப்படமும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை. எனவே Geo-Tagg எடுத்து பதியப்படாத நிலையில் மனுதாரர் கழிப்பிட மானியம் பெறுவதற்கான தகுதியற்றவர் ஆகிறார்.

- இருப்பினும், மனுதாரர் பலமுறை கோரிக்கை மனுக்கள் பேரூராட்சியில் சமர்ப்பித்ததை தொடர்ந்து, நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் திரு. G. பிரபு என்பவர் ஏற்கனவே தன்னிச்சையாக கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தி வருவதால் இத்திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிட மானியம் வழங்க வழிவகையில்லை என்பதை இம்முறைமன்றத்தில் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது கடிதம் வாயிலாக தெரிவித்துள்ள எழுத்துப்பூர்வ வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பூலாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க

அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. G. பிரபு என்பவர் தனது 28.11.2025 நாளிட்ட புகார் மனுவில் 2022-23ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பறை கட்டியதாகவும் ஆனால் இத்திட்டத்தின் கீழ் தனக்கு வழங்க வேண்டிய மானிய தொகை பூலாம்பட்டி பேரூராட்சியால் இந்நாள்வரை வழங்கப்படவில்லை என தெரிவித்திருப்பதை அறிய வருகிறது.

மேற்காணும் புகார் குறித்து, தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிடம் கட்டுவதற்கான மானிய தொகை பெறுவதற்கு முதலில் பயனாளர் உரிய விண்ணப்பத்தை இணையதளம் மூலம் விண்ணப்பித்து, பயனாளர் எண். (Application ID) ஏற்படுத்தி, கட்டுமான பணிகளின் 3 நிலைகளில் Geo-Tagg புகைப்படமும் எடுக்கப்பட்டு ஆய்வு செய்த பின்னர் மானிய தொகை வழங்கி வரும் நிலையில், மனுதாரர் கழிப்பறை கட்டும் முன் பயனாளர் எண் ஏற்படுத்தாமலும், 3 நிலைகளிலான புகைப்படங்களை எடுக்கப்படாமலும், ஏற்கனவே தன்னிச்சையாக கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தி வரும் மனுதாரரின் கழிவறைக்கு தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பிட மானியம் வழங்க வழிவகையில்லை என பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

மேற்காணும் நிலையில், பூலாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலத்தை ஏற்று, மனுதாரரின் 28.11.2025 நாளிட்ட புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. G. பிரபு,
வளையசெட்டியூர், பூலாம்பட்டி அஞ்சல்,
எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் - 637 107.
2. செயல் அலுவலர்,
பூலாம்பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம் - 637 107.
3. பேரூராட்சிகளின் இயக்குநர், பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer). (பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/7/26

செயலாளர்
16/7/26

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032